ஸ்ரீ



திருப்பத்தூர் தாலுகா

குறும்பேறி கிராமத்தி லெழுந்தருளியிருக்கும்

சென்னகேசவப் பெருமாள் மீது

போளூர் தாலுக்கா வில்வாரணிக்கடுத்த

சேங்கபுத்தூர்

சண்முக சுவாமிகளா

லியற்றப்பட்ட

பதிகமும் கும்மியும்,

குறும்பேறி கிராமவாசிகளால்,

திருப்பத்தூர் :

நேஷனல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1931.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



திருப்பத்தூர் தாலுக்கா

குறும்பேறி கிராமத்தி லெழுந்தருளியிருக்கும்

சென்னகேசவப் பெருமாள் மீது

போளூர் தாலுக்கா வில்வாரணிக்கடுத்த

சேங்கபுத்தூர்

சண்முக சுவாமிகளா

லியற்றப்பட்ட

பதிகமும் கும்மியும்,

குறும்பேறி கிராமவாசிகளால்,

திருப்பத்தூர்:

நேஷனல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1931.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பதிகம்.

திருவளரு மார்பனே திவ்வியகுண ரூபனே
    தேவகித் திருமைந் தனே
தேவர்கள் சகாயனே திருமகள் மணாளனே
    சிறந்தகரு டன்வா கனு
மருவளருந் துழாய்மாலை யணிந்த கோவிந்தனே
    மறிகடல் சேஷ சயனு
மாயமிகு ராவணனைக் கோதண்ட வில்லினுல்
    மாளாத தலைகள் பத்தும்
செருவளர வீட்டினுய் தேவர்பய மோட்டினுய்த்
    தீரனே ரகுரா மனே
செகமதனி லுன்பெருமை தனையெடுத் தோதிடச்
    சிறியனு லாகுமோ தான்
தெருள்வளரு நின்னடியர் கூட்டத்தில் யான்கூடத்
    தீயனேன் றன்னை யாள்வாய்ச்
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
    செனகேச வைகுந் தனே. (1)

சாத்திர வாசனை யறியாத பாவினான்
சண்டாள னான பாவி
சற்குரு தனைப்போற்றி செய்யாத பாவிவின்
சண்டையே யிட்ட பாவி
பாத்திரம் பூக்கொண்டு பாதமல ரைப்பூசை
பண்ணாத கொடிய பாவி
பார்மீது பொய்சாட்சி சொல்லியே யென்னுடைய
பாழ்கும்பி வளர்த்த பாவி
பாத்திரங் கைக்கொண்டு பலிகொண்ட பாவியான்
பாதகஞ் செய்த பாவி
பாரிலுள் ளோர்களுக் காகாத பாவியைப்
பாசமுடை யெமன்மோ துவான்
சூத்திர மாய்கையெல் லாம்வல்ல கடவுளே
துட்டனை யாளுகண் டாய்ச்
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலிறைச்
செனகேச வைகுந் தனே. (2)

இந்திர னொருபுரஞ் சந்திர னொருபுரம்
இசைபாடு பவரொரு புரம்
இருளோட்டுஞ் சூரிய னோர்புரம் நீங்காத
ரிஷிகூட்டந் தானொரு புரம்

மந்திரமெ னச்சொலும் வேதங்க ளொருபுரம்
    வேதவே தியரொரு புரம்
மரிக்காது வரம்பெற்ற முப்பத்து முக்கோடி
    மாதேவ ரோர்புர முமாய்ச்
சந்தமார் கின்னரர் கிம்புருட ரொருபுரஞ்
    சதுர்முகன் தானொரு புரம்
சரஸ்வதி யொருபுரமி லக்குமி யொருபுரம்
    சசியெனும் பெண்ணொரு புரம்
சுந்தர மமைந்தமணி மண்டபத் திடைநினைச்
    சுகுணமுடன் காண்ப தெப்போ
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி கன்னிலுறைச்
    செனகேச வைகுந் தனே. (3)

ஆரண காரண வகில பரிபூரண
    ஆதிமத் யாந்த ரகிதா
அனலுநீ புனலுநீ மண்ணுநீ விண்ணுநீ
    யசையுமொரு வாயு நீயே
வாரண மன்றுதி மூலமே யென்றுசொல
    வாட்டியருள் தந்த வனுநீ
மாயமாம் பூதகி முலைப்பாலை யுண்டவனை
    மறலியிடஞ் சேர்த்த வனுநீ

பாராயண மம்பண்ணி யுன்னுமந் தான்சொலப்
பாலகன் பிரகலாதன்
பாதகன் தந்தையா மிரணியனை சம்மாரஞ்
பண்ணிய தெய்வ நீயே
துரிசுடைய வடிவமே கொண்டுல கலைந்திடுஞ்
சிறியேனை யாண்ட ருளுவாய்ச்
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
சென்னகேச வைகுந் தனே. (4)

பூர்வீக சென்மமுத லிப்பிறவி முடிவுவரை
புன்மையே யெடுத்த சென்மம்
புழுவிலெத் தனைசென்மம் நரியிலெத் தனைசென்மம்
புன்கவியெத் தனைசென் மமோ
கார்விட முடையபாம் பெத்தனை சென்மமோ
கறையானெத் தனைசென் மமோ
காக்கையெத் தனைசென்மம் பேய்களெத் தனைசென்மம்
கரடியெத் தனைசென் மமோ
போர்முக யானையெத் தனைசென்ம நீங்காத
புலியாயெத் தனைசென் மமோ
புகலரிய சிங்கமா யெத்தனைச் சென்மமோ
புனிதனே சென்மம் போதும்

தேர்வுறு வண்ணமாச் சென்மமெடுக் காதவகைச்
சிறந்தநின் பதமரு ளுவாய்ச்
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
செனகேச வைகுந் தனே. (5)

சென்மசென் மங்கடோறுஞ் செய்கின்ற தீவினையைத்
தீமனங் கொண்ட ழுவனே
சிரநாலோன் யான்செயுங் கொடுவினை தனக்கிடாச்
சென்மந்தரு வதற்கழு வனே
சன்மமாந் தாயார் வயிற்றிலே கருவாகக்
கட்டுண்ட தற்கழு வனே
காற்றினு லேதள்ளி தலைகீழாய் வந்ததொரு
கர்மத்திற் கேயழு வனே
இன்பமில் லாவென்னை படைத்திட்ட நான்முகன்
இறக்கவில்லை யென்றழு வனே
எமனும் பொல்லாத கண்டக னென்றனைத்
தண்டித்த தற்கழு வனே
சின்மய வடிவான சீதேவி பூதேவி
சேர்ந்திடுந் தேவ தேவா
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
செனகேச வைகுந் தனே.

கல்லாத வம்பன்வழி நில்லாத வம்பனொரு
 காசும்பொ ருத வம்பன்
கல்மன வம்பனென வுலகோர்சொல் வம்பனொரு
 காசுமீ யாத வம்பன்
பொல்லாத வம்பனடி யார்தூஷ ணைவம்பன்
 புன்மைகள் செய்யும் வம்பன்
பொய்சொல்லும் வம்பனுனை எண்ணாத வம்பனான்
 போக்கிரி யான வம்பன்
நல்லாரை நேராகக் கண்டாலு மோயாது
 நாய்போல் குலைக்கும் வம்பன்
நாசச்ச ரீரத்தை மெய்யென்ற வம்பனுன்
 நாமஞ்சொ லாத வம்பன்
செல்லாத வம்புசெய் கொலைசெய்யும் வம்பனெனைச்
 சேரநீ யாண்டருளு வாய்ச்
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
 சென்கேச வைகுந் தனே. (7)

உனதுபுக ழோதுநல் வேதாந்த நூல்களை
 யுற்றறிவ தெக்கா லமோ
ஓயாது பொய்சொல்லி வீண்பொருள் பறித்தநான்
 இன்படைவ தெக்கா லமோ

கனமான வஷ்டாட் சரச்செபஞ் செய்துநான்
கழலடைவ தெக்கா லமோ
காயமது பொய்யென்றுங் கடவுள்தான் மெய்யென்றுங்
கருத்தமைவ தெக்கா லமோ
சினமெனுங் கோபத்தை யுள்ளேய டக்கியான்
சீரடைவ தெக்கா லமோ
தேகாதி பிரபஞ்ச மக்கள்மனை யெல்லாந்
துறந்திடுவ தெக்கா லமோ
சொன்னாலுங் கேளாத கசடனு மென்னையுந்
தொண்டரொடு கூட்டுகண் டாய்ச்
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
செனகேச வைகுந் தனே. (8)

உலகத்தி லேபிறந் திதுவரையு முன்னுமம்
ஓதாத பாவி யானேன்
ஓயாது பெரியோரை யென்னேரஞ் சேர்க்காது
ஓட்டியே யேசி னேனே
கலகத்தி லேநல்ல பேர்தா னெடுத்தனே
கற்புடைய மனைவி மாரைக்
கருதியே யவர்சாபங் கொண்டனே காணாது
களவுகொலை செய்திட் டனே

சலத்திலே மேலாடை யில்லாது மூழ்கினுன்
 சண்டாள ஞயி னேனே
சாத்திர விதிப்படிச் செய்தநின் கோயிலில்
 சாலகுற் றஞ்செய் தனே
திலத்தினள வில்லாத தீயனேன் றன்னையுன்
 திருவடியில் வைத்த ருளுவாய்ச்
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
 செனகேச வைகுந் தனே. (9)

அப்பனே யுன்கோயி லொருபடிக் கல்லாக
 அவதரித் திடாது போனேன்
ஐயனே யுன்கோயில் மாட்டிலொரு மாடாக
 அவதரித் திடாது போனேன்
செப்பமா யுன்கோயில் மாட்டைதான் மேய்க்கின்ற
 சிறியதோ ராளா கிலேன்
சிங்கார மாயுன்ற னர்ச்சனைக் கேற்றதொரு
 சிறந்தபூஞ் செடியா கிலேன்
இப்படியில் நீயேறி வருகின்ற தேரிலொரு
 ஏற்றகா லாய் பிறக்கிலேன்
ஏகனே நீயேறும் வாகன மரங்களாய்
 ஏனே பிறக்க விலைநான்

துப்புறவி லாமலே யிப்படி யலைந்திடுந்
துட்டனை யாள்வ தெப்போ
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
சென்கேச வைகுந் தனே. (10)

நாராய ணாவென்று வுன்னாமஞ் சொல்லாத
நாவுமொரு நாவல் லவே
நானிலந் தன்னிலே யுன்வடிவு நினையாத
நெஞ்சுமொரு நெஞ்சல் லவே
பாராய ணம்பண்ணி யுன்பெருமை யெண்ணாத
பாதகன் மனித னல்ல
பார்மீது வுன்கோயில் போகாத வினர்கால்
பந்தலிடு மரக்கா லதாம்
காராய வண்ணநினைக் கும்பிடாக் கைகள்தான்
களவுசெய் திடுங் கைகளே
கண்ணனே யுன்றனைக் காணாத கண்கள்தான்
காக்கைகள் கொத்துங் கண்கள்
சீராய நல்வழி நடக்காத தியனைச்
சிறந்தனின் னடிசேர்த் திடாய்ச்
சுரும்பேறி யரும்பாரும் குரும்பேறி தன்னிலுறைச்
சென்கேச வைகுந் தனே. (11)

சீராருஞ் சூரியன் சந்திர னொளிபுகாத்
தேன்சோலை சூழ்ந்த வூராம்
தேவர்க ளெப்போது மூடாத கண்கொண்டு
சிறப்புடன் பார்க்கு மூராம்
காராரு மேகங்கள் எப்போது மோயாது
கனகமழை பெய்யு மூராம்
கருங்கட லொலிபோலக் கண்கண்ட விடமெலாங்
கல்வியே பயிலு மூராம்
நேராருந் தானங்கள் பதினாறு நீங்காது
நேசமா யளிக்கு மூராம்
நேர்த்தியாய்ச் செந்நெலும் கன்னலும் விளைகின்ற
நிகரிலா துயர்ந்த வூராம்
தாராரு மிவ்வளம் பலவளமு நிறைந்தவூர்த்
தேவனே யெனையா ளுவாய்ச்
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
சென்கேச வைகுந் தனே. (12)

பிள்ளையைப் பெற்றெடுக் காதவோர் மலடிதான்
பிள்ளையின் பெருமை யறியாள்
பிரியமுடன் படிக்காத மூடர்கள் கல்வியின்
பெருமைதனை யறிய மாட்டார்

எள்ளாத புலவரா யிருப்பினு மவர்களை
ஏளனந் தான்பேசுவார்
எவ்வளவு கஷ்டமா யொருசெய்யுள் பாடினும்
என்னபாட் டென்று சொல்வார்
தெள்ளுதமி ழறியாத தீயனேன் கல்வியின்
திறத்தையறி யாது போனேன்
தெய்வத்தி லுனைப்போல வொருதெய்வங் கண்டதில்லை
தேவர்கள் தேவ தேவா
தெள்ளிய தேன்மொழிச் சீதேவி பூதேவி
சேர்ந்தனின் பெருமை யறியேன்
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
சென்கேச வைகுந் தனே. (13)

பேர்பூத்த செந்தா மரையிலுறு சீதேவி
திருமார்பில் வைத்த தேவா
பெரியதே வர்க்காகப் பாற்கடல் கடைந்துதான்
பிரியமுட னமுதூட் டினுய்க்
கார்பூத்த சகடனெனுஞ் சூரனைக் காலினால்
கலங்கவே தானு தைத்தாய்
கசடனு மெனதுமன வஞ்ஞானந் தன்னையுன்
கமலபதத் தாலு தைப்பாய்

ஏர்பூத்த காயாம்பூ மேனியுடை யையனே
எளியனேன் தன்னை யுன்றன்
எழிலாரும் வைகுந்த மடையுமடி யாருடன்
எப்போதுங் கூட்டி வைத்துச்
சீர்பூத்த வுனதுபதந் தந்துதா னென்மீது
திருக்கண்வைத் தருளு வாய்நீ
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
செனகேச வைகுந் தனே. (14)

அடியார்கள் மனதினி லெப்போது நீங்காது
அருள்குடி கொண்ட பெருமாள்
அஞ்ஞானங் கொண்டுதனை எண்ணாத கயவரை
அடியோடு நீங்கு பெருமாள்
கடிமன மிளகியே கருத்துடன் துதிப்போர்க்குக்
காட்சியே கொடுக்கும் பெருமாள்
கல்மன முருகாத கயவர்க்கு வென்னாளுங்
கஷ்டமே கொடுக்கும் பெருமாள்
செடியாருங் காட்டினில் சீதையைத் தூக்கினன்
சென்னிபத் தறுத்த பெருமாள்
சிசுபாலன் கஞ்சனைத் தேனுகா சூரனைச்
சிரச்சேதஞ் செய்த பெருமாள்

தொடியாருங் கோதைய ரிருவோர்கள் சேர்ந்திடுந்
தெய்வமே யென்னை யாள்வாய்ச்
சுரும்பேறி யரும்பாருங் குறும்பேறி தன்னிலுறைச்
சென்கேச வைகுந் தனே. (15)

பதிகம் முற்றிற்று.

அவையடக்கம்.

மாநிலந் தன்னிலே மாசூரி யன்போன்ற
    மாப்பெரும் புலவர் முன்னே
மானிட னொருவனுன் மாட்சியில் பதிகத்தை
    மண்ணினில் யான்சொன் னது
மானமார் கடனீரை யெல்லாங் குடிப்பனென
    மசகநினைத் ததையொக் குமே
வானமார் பானுவின் முன்வந்து நிற்குமொரு
    வண்மையில் மினியொக் குமே
ஆனாலு மிப்பதிகந் தன்னிலே சொற்குற்றம்
    அருமையாம் பொருள்குற் றமும்
அழகான மெல்லினம் வல்லின நிற்குமிடம்
    அதுமாறி தானிற் பினும்
அல்லாமல் யாப்பணி யிலக்கணச் சந்திகள்
    அளவிலாக் குற்ற மாகில்
அதுகளை பொறுத்துங்கள் அிசுவாக வேகொண்டு
    அருள்புரிய வேண்டு மாதோ.

நூற்பயன்.

இப்பெரும் பதிகம் படித்தவர் கேட்டோ
　　ரிந்திரன் பதவியைச் சேர்வர்
இப்பெரும் பதிகம் படித்தவர் கேட்டோர்
　　எம்பெரு மான்பதஞ் சேர்வர்
இப்பெரும் பதிகம் பாடினேன் கேட்டோர்
　　மற்றவர் யாவரு மென்றும்
இப்புவி யதனி லென்றுநல் வாழ்வை
　　இன்புடன் பெற்றுவாழ் வாரே.

காப்பு.

சீருஞ்சி றப்புமா யோங்கிநி றைந்திடுஞ்
சென்னகே சப்பெரு மாள்மீது
பேரும்பெ ருத்திடுங் கும்மியைப் பாடிடப்
பெருச்சாளி வாகனன் காப்பாமே.

கும்மி.

கும்மியடி மதே கும்மியடி நீங்கள்
கூடிக் கும்மிய டியுங்கடி
நன்மை யாள்சென்ன கேசவப் பெருமானை
நாடிக் கும்மிய டியுங்கடி. (1)

மங்கைய ரேயொன்ருய்க் கூடுங்கடி நல்ல
வாயாரப் பாடுவோம் வாருங்கடி
செங்கையை வீசியே யாடிடுவோ மந்தச்
செகதீசன் றன்னையே பாடிடுவோம். (2)

தேவர்க்கு தேவனு யானண்டி யவன்
திருடியே வெண்ணையை யுண்டாண்டி
யாவர்க்கும் யாவரு மானண்டி மிக்க
ஆடு மாடுகள் மேய்த்தாண்டி. (3)

பொய்ய ருளத்தினில் போகாண்டி யவன்
போனாலு மங்கே நில்லாண்டி
மெய்ய ருளத்தினில் நீங்காண்டி யவன்
மெய்மையைப் பாடிய டியுங்கடி. (4)

அச்சுதன் பாதத்தைச் சேருங்கடி தெய்வம்
அவனைவிட தெய்வம் வேறேயில்லை
குச்சிதம் பேசாது கூடியே நாமெல்லாம்
கும்மிய டிப்போம் வாருங்கடி. (5)

இந்திர னேவிய கல்மழை தன்னாலே
இடையர்க ளெல்லா மயங்கிடவே
சுந்தர மானகோ வர்த்தன மேந்தியே
யோட்டினான் துயரத்தைப் பாருங்கடி. (6)

உலகமெல் லாஞ்சுற்றி வந்தாலும் நல்ல
உயர்ந்த நதியினில் மூழ்கினாலும்
ஓல மிடுநல்ல வேதத்தைப் பார்த்தாலும்
உலகநா தன்பதம் பாடவேண்டும். (7)

துதிக்கு மடியார்க்குத் துன்பங்க ளோட்டுவான்
துதியார்க்குத் துன்பங்கள் மாட்டிடுவான்
சுதிக்சடி யார்களைச் சேர்த்திடு வானவன்
சுயவரை யமனிடஞ் சேர்த்திடுவான். (8)

காயம தாவது பொய்யாகு மந்த
கடவுள் தானே மெய்யாகும்
மாயமாம் பூதகி பாலைக்கு டித்திட்ட
மாயனைப் பாடிய டியுங்கடி. (9)

மாரீசன் றன்னை மானென வேவியே
மாசீதை யென்னும் பெண்ணைக்கண்டு
காரிகை தன்னைத் தூக்கியே போய்விடக்
கண்டனஞ் செய்தானென்ற டியுங்கடி (10)

ஏக வுருவாக நிற்பாண்டி யவன்
எங்கும் பரவி யிருப்பாண்டி
ஏகமும் போகமுங் கடந்தாண்டி யவன்
எங்களுக் கான புனிதனடி (11)

எங்கெங்கு மான்மாவா யிருப்பாண்டி யவன்
என்னுக்கு ளென்னைபோ லிருப்பாண்டி
சங்கையுஞ் சக்கரங் கொண்டாண்டி கையில்
சாரங்க மென்னும் வில்லாண்டி. (12)

தாடகை சம்மாரஞ் செய்தாண்டி நல்ல
சத்திய யாகத்தைக் காத்தாண்டி
காடதைத் தாண்டியே மிதுலா புரியினில்
கன்னியெ னுஞ்சீதை மணந்தாண்டி. (13)

காளிங்க நிர்த்தனஞ் செய்தாண்டி யவன்
கன்றுகளை மேய்த்து வந்தாண்டி
கடளிகள் தின்னவே ராவண சம்மாரஞ்
குவலயங் காக்கச் செய்தாண்டி. (14)

காமன்ற னக்கொரு தந்தையடி யவன்
கதிர்வடி வேலவன் மாமனடி
மாமனுங் கஞ்சனை வதைத்தாண்டி யவன்
மாசீர்த்திப் பாடிய டியுங்கடி. (15)

கோவிலுக் குள்ளே போவோ மடிநாம்
கோபால ராமனைப் பார்ப்போமடி
நாவினு லேதுதி பாடிடு வோம்நன்றாய்
நாமெல்லாங் கோவிந்தம் போடுவோமே. (16)

பாண்ட வர்க்குத்தூது சென்றாண்டி யங்கே
பத்தினித் ரௌபதை யழுதிடவே
நீண்ட வஸ்திரம் மாளாது தந்திட்ட
நிமலனைப் பாடிய டியுங்கடி. (17)

மாரீசன் றானொரு மாயமா னாகியே
மாயமாய் வந்து விளையாட
காரிகை சீதை கண்டு பிடித்திட
கணவனும் ராமனை யேவிடவே. (18)

கண்டானே ராமன் மாயமா னோட்டத்தை
காணாமல் திகைத்து நின்றானே
துண்டத் தனமுள்ள மானைப்பின் கண்டுதான்
துண்டித்தான் மானதைக் கேளுங்கடி. (19)

வாலியைத் தான்வதஞ் செய்தாண்டி நல்ல
விபீஷணன் றன்னைக் காத்தாண்டி
காலமெல் லாங்கல்லா யிருந்த வகலிகை
கணவனைச் சேரச் செய்தாண்டி (20)

தேவர்கள் வாழி மறைவாழி பசு
தேயாது வாழியிப் பாடல்வாழி
கோவலர் வாழி மறையவர் வாழியிக்
குறும்பேறி யென்றும் வாழியவே. (21)

முற்றிற்று.